Shalom

ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 4
இதழ் : 9

ஜூலை 2008



## கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்

எபிரெயர் 3:1

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## *சுதேச ஊழியர் சாட்சி – சகோ. ரனியாபாய் பாபோர்*



இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த ஊழியரின் பெயர் ரனியாபாய் பாபோர், குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டம் காபரியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இங்குள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றி ஒன்றும் தெரியாது, உலக அறிவு சிறிதும் இல்லாமல் அந்தகாரத்திற்குள் வாழ்பவர்கள். இவருடைய வாழ்க்கை பாவம் நிறைந்த வாழ்க்கையாய் இருந்தது. இவர் சாராயம் குடிப்பது, பீடி குடிப்பது, திருடுவது போன்ற தீய பழக்கங்களுடையவராக இருந்தார். இவர் சாத்தானின் பிடியில் கட்டப்பட்டிருந்தார். துக்கம் மற்றும் வேதனையின் இருளில் வாழ்ந்து வந்தார். பிசாசை விரட்ட கோழி, ஆடுகளை ப– கொடுத்தால் சமாதானம் கிடைக்கும் என்று மந்திரவாதிகளை நாடிச் சென்றார், ஆனால் சமாதானம் கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் இவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டார். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தன் பாவ வாழ்க்கையி–ருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட்டார். இயேசு இவரது வாழ்வில் வந்தவுடன் இயேசுவுக்காக வாழ்வேன் என்று தீர்மானித்து இயேசுவுக்காக ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இவருக்காவும், இவருடைய குடும்பத்திற்காகவும், இவர் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்...

**இவரை தாங்குபவர்: St. George's CSI Church** - Madurai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....

***ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.***



இம்மட்டுமாக காத்து வந்த இம்மானுவேலை துதிப்போம். தேவன் இவ்வருடத்தில் 7 வது மாதத்தை காண கிருபை செய்துள்ளார். கடந்த மாதம் முழுவதும் தேவன் நம்மை காத்தப்படியால் அவருக்கு நன்றி கூறுவோம்.

1991ம் ஆண்டு -ஜீலை மாதம் 1ஆம் தேதி நம்முடைய பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. தேவ கிருபையால் 17 ஆண்டுகள் நிறைவு பெற்று 18 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபைத் தந்தார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக. 17 ஆண்டுகளாக எங்களுடன் இணைந்து, நேசித்து, ஜெபித்து, தாங்கிய உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்களையும் , நன்றியையும், குடும்பமாக ஊழிய ஸ்தாபனத்தின் சார்பாகவும் தெரிவிக்கிறேன்.

ஜீன் மாதத்தில் (4 – 15) வரை குறிப்பாக சிங்கப்பூர் தேசத்தில் பாசிர் பஞ்சங் தமிழ் மெத்தடிஸ்ட் சர்ச் சபை சார்பில் அழைக்கப்பட்டேன். ஒரு வாரம் தேவன் சிங்கப்பூர் ஊழியங்களை ஆசீர்வதித்தார். மேலும் Home of Prayer சில சபைகளிலும் ஊழியம் செய்யவும், அநேக போதகர்களை கண்டு ஊழியங்களை பகிர்ந்துக் கொள்ளவும் தேவன் கிருபை தந்தார். சிங்கப்பூர் சபை மக்களுக்கு நாங்கள் ஆசீர்வாதமாக தேவ செய்தியைப் பகிர்ந்துக் கொண்டோம். ஜெபித்த உங்களுக்கு என் நன்றியைக் கூறுகிறேன்.

இம்மாதம் நம் பீல் ஆதிவாசிப்பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. நமக்கு தேவன் பல்லாயிர ஆதிவாசி பிள்ளைகளை கொடுத்து இருந்தாலும் குறிப்பாக சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் நம் இராஜஸ்தான் விடுதிப் பிள்ளைகள், மற்றும் ஷாலோம் விடுதிப் பிள்ளைகள்,

சுமார் 800 பேர்களுக்கு சீருடை, புத்தகங்கள், கல்விக்கான கட்டணம், இவைகளை கட்டுவதற்கு குறைந்தது ரூ.4,00,000/– அவசர, பணத்தேவையாக உள்ளது. இதற்காக ஜெபித்து, ஆவியானவர் ஏவுத–ன்படி ஒரு பிள்ளைக்கு சராசரியாக ரூ. 500/– வீதம் 800 பிள்ளைகளுக்கு கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

அடுத்த மாத மலர் 18ம் வருட சிறப்பு மலராக வெளியிட பிரயாசப்படுகிறோம். குஜராத், தாகோத், பணித்தள அலுவலகத்திற்காகவும், 3 மாநிலத்தில் உள்ள திருச்சபைகளை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் 2020 ஆம் ஆண்டு முடிவதற்குள், 1000 சபைகள், 2,500 கிராமங்களை சந்தித்தல், 10,000 மூப்பர்களை பயிற்றுவித்து உருவாக்குவதல், 3,00,000 ஆத்துமாக்களை சபைக்கு கொண்டுவருதல் என திட்டமிட்டு செயல்படுகிறோம்.

பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்து, தாங்கக் கூடிய அநேக தேவப்பிள்ளைகள், குழுக்கள், சபைகள் எழும்ப ஜெபியுங்கள். குறிப்பாக நம் ஊழியத்திற்காக ஜெபித்து, மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கக்கூடிய மற்றும் காணிக்கைகளை சேகரித்து அனுப்பக் கூடிய பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள். கர்த்தருடைய ஆவியானவரின் ஏவுதல் இருப்பின் எங்களுடன் தொடர்புக் கொள்ளுங்கள்.

***தேவன்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.***

**“தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கெள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான். நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.”** (மத்தேயு 10:41)

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பாருங்கள் (எபி. 3:1)

சிறப்பு செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

ஒருமுறை சுவாமி. விவேகானந்தர் அவர்கள் வெளிநாடு ஒன்றில் தனது ஊழியத்தை செய்த போது அங்கிருந்த கிறிஸ்தவ சபை தலைவர்கள் தங்களுக்கும் ஏதாவது பிரசங்கம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் மிக சுருக்கமாக எனது அன்பு கிறிஸ்தவ நண்பர்களே, மீண்டும் நீங்கள் உங்கள் இயேசுவினிடத்திற்கு திரும்பிச் செல்லுங்கள் அவர் வாழ்க்கையை கவனியுங்கள். அவர் சொல்லுவதையே செய்யுங்கள். என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

எனக்கன்பானவர்களே, நம்முடைய வேதத்தில் எபிரேயர் 3:1—ல் வாசிக்கிறோம். இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். நாமும் இவ்வேளையில் கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பார்த்து நம்முடைய வாழ்வில் இயேசுவைப் போல் ஜீவிக்க தேவன் கிருபை தருவாராக.

## 1. இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்வு :—

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த 33 ஆண்டுகள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தார். அவருடைய பிறப்பிலும் பரிசுத்தம். ஏனென்றால் அவர் பரிசுத்த ஆவியினால் உற்பவித்து பிறந்தார் என்று பரிசுத்த வேதம் சொல்லுகிறது. I யோவான் 2 : 16 வசனத்தின்படி மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தத்தை காத்துக் கொண்டவராய் அவர் ஊழியம் செய்தார். பாவிகளை நேசித்து பாவிகளோடு வாழ்ந்து தன் வாழ்க்கையில் பரிசுத்தத்தை காத்துக் கொண்டார். யோவான் 8 : 46—ல் வாசிக்கிறோம். என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று இயேசு தன்னை குறித்து சாட்சி கொடுக்கிறார். இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத் இயேசுவைக் குறித்து குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்று சாட்சிக் கொடுத்தான். மத்தேயு 27 : 24—ல் பிலாத்துவும் இந்த நீதிமானுடைய

இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் என்று இயேசுவை குறித்து நீதிமான் என்று சாட்சி கொடுத்தார். லூக்கா 23 : 47–ல் நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்–, தேவனை மகிமைப்படுத்தினான். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

இமயமலையின் அடிவாரத்தில் **எர்மீன்** என்ற ஒரு **பிராணி** பார்ப்பதற்கு முயலைப் போன்ற தோற்றம் உடையது. அதின் முடிகள் மிகவும் வெண்மையாக இருக்கும். அந்த முடி மிகவும் விலையேறப்பெற்றது. அந்த முடியை எடுத்து ராஜாவின் கீரிடத்தை அழகுப்படுத்துவதற்காக அதில் சேர்ப்பார்கள். அந்த எர்மின் என்ற பிராணியை வேட்டிடையாடுபவர்கள் வேட்டையாடி எடுத்து செல்வார்கள். அதை வேட்டையாடுபவர்கள் எப்படி பிடிப்பார்கள் என்றால் அது பக–ல் இரைதேடி விட்டு மாலையில் தான் வாழும் பொந்துக்குள் நுழையும் போது வேட்டையாடுபவர்கள் பொந்துக்குள் அசீங்கமான, நாற்றம்பிடித்த பொருட்களை பொந்துக்குள் வைத்து விடுவார்கள். நாற்றம் தாங்க முடியாமல் உள்ளே நுழையாதபடி அது வெளியே திரும்பும் நேரத்தில் எதிராக நிற்கிற வேடனை பார்க்கும். வேடன் தன்னை வேட்டையாடப் போகிறான் என அறிந்தும் கூட தான் தப்பிப்பதற்காக அந்த நாற்றம் பிடித்த பொந்துக்குள் நுழைவதில்லை. மாறாக தன்னுடைய முன்னங்கால்களை கைகூப்பி வேடன் முன்பாக அசையாமல் நிற்குமாம் அதற்கு அடையாளம் என்னவென்றால் தன் இருப்பிட நாற்றத்திற்காக தன் உயிரை மாய்த்து கொள்ள துணிகிறது. சிறிய பிராணியாகிய எர்மீன் தன் இருப்பிட சுத்தத்திற்காக வேடன் கையில் அகப்பட்டு தன் உயிரை மாய்த்துகொள்கிறது. அதுபோல நம்முடைய பரிசுத்த வாழ்க்கைகக்காக இயேசு கிறிஸ்து தன் ஜீவனை நமக்காக கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இருந்த பரிசுத்தம் நம்முடைய தனிப்பட்ட அனுதின வாழ்க்கையிலும் காணப்படும்படியாக வாஞ்சிப்போம். நாம் இயேசு கிறிஸ்துவை எவ்வளவு அதிகமாய் நேசிப்போமோ அவ்வளவு அதிகமாய் பரிசுத்தத்தை வாஞ்சிப்போம்.

## 2. இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையில் நாம் காண்பது அவருடைய ஜெப வாழ்க்கை.

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெபவாழ்வு பிதாவாகிய தேவனோடு கூடியுள்ள

ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது. யோவான் 8 : 29—ல் என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்கும் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார். இயேசு கிறிஸ்து எப்பொழுதும் பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாயிருந்தபடியினாலே அவர் என்னை தனியாக இருக்கவிடவில்லை என்று இயேசு சொல்லுகிறார். பிதாவோடு கூட உள்ள ஐக்கியம் அவருடைய ஜெப வாழ்க்கை அவருடைய பிதாவோடு ஐக்கியத்தை எப்பொழுதும் வைத்துக் கொண்டதை மாற்கு 1:35—ல் அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்திரமான ஓரிடத்திற்குப்போய் அங்கே ஜெபம்பண்ணினார். லூக்கா 6 : 12, 13—ம் வசனத்தில் வாசிக்கிறது போல அவர் இராமுழுவதும் ஜெபித்தார் என்று வாசிக்கிறோம். அவர் காலையிலும், இரவிலும் ஜெபிக்க ஜெபிக்க இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையிலே அவர் என்ன செய்ய வேண்டுமென்பதை பிதாவாகிய தேவன் காட்டிக் கொடுக்கிறார். அவர் இராமுழுவதும் ஜெபித்து வரும் போது கீழே வந்து அப்போஸ்தலர் 12 பேர்களை தெரிந்துதெடுக்கிறார். எத்தனையோ சீஷர்கள் பின்னாக இருந்தாலும் கூட அவர் யாரை தெரிந்தெடுக்க வேண்டும் என்று ஜெபிக்கும்பொழுதே பிதாவாகிய தேவன் அவருக்கு வெளிப்படுத்துகிறார். அதைப் போல தன்னுடைய மரணவேளையிலும் கூட லூக்கா 22 : 42—ம் வசனத்தில் வாசிக்கிறோம். அவர் பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபித்தார். லூக்கா 22 : 42 முதல் 44 வசனங்களை வாசித்துப் பாருங்கள். இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும் என்று பிதாவோடு பேசுகிறார். ஒருமணிநேரம் கெத்சமனே தோட்டத்தில் அவர் ஜெபிக்கிறார். தன்னுடைய வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணிக்கிறார். அந்த ஒரு மணி நேர ஜெபம் அவருடைய வாழ்க்கையிலே வெற்றியைத் தருகிறது என்று பார்க்கிறோம். அந்த ஒருமணி நேர ஜெபத்தின் விளைவாக யூதாஸ்காரியோத் காட்டிக் கொடுக்க வரும்போது அவரைப் பார்த்து சிநேகிதனே என்று சொல்லுகிறார்.

சிலுவையிலே மரிக்கும் போது பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அதுமட்டுமல்ல ஒரு மணிநேரம் தன்னுடைய வாழ்க்கையை பிதாவோடு ஐக்கியம் கொண்டபடியினாலே அவரைத்தேடி வரும்போது நான்தான் என்று அவர் சொல்லுகிறார். அப்பொழுது அந்த போர்ச்சேவகர்கள் பின்னிட்டு விழுந்து போகிறார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அந்த 1 மணி நேரம் பிதாவோடு கூட உள்ள ஐக்கியம் அவரை முழுமையாக பிதாவின் சித்தத்திற்கு

ஒப்புக்கொடுக்கும்படியாக வைத்தது. வேதம் சொல்லுகிறது அவர் பிதாவோடு ஐக்கியம் கொள்ள கொள்ள அந்த பெலவீனமான நேரத்திலே ஒரு தேவதூதனை அனுப்பி பிதாவாகிய தேவன் அவரை பெலப்படுத்துகிறார். அதே வேளையில் பேதுருவைப் பாருங்கள் 1 மணி நேரம் அவன் ஜெபிக்காதபடி உறங்கிவிட்டபடியினாலே அவன் மாம்சீகத்திலே எழுந்து அவன் வேலைக்காரனுடைய காதுகளை வெட்டுகிறான் என்று பார்க்கிறோம். அதுமட்டுமல்ல இயேசுவை மறுத–த்து, இயேசுவை விட்டு தூரமாக விலகிச்சென்றான் என்று பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுக்க வரும் போது சீஷர்கள், அங்கிருந்தவர்கள் எல்லாரும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்று பார்க்கிறோம். இயேசு தன்னுடைய முழு வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்று நாம் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையை நாம் தியானிக்கும் போது நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல ஆண்டவரோடு கூட உள்ள ஐக்கியத்திலே, ஜெப வாழ்க்கையிலே நாம் முன்னேற வேண்டும். நம்முடைய ஜெப வாழ்க்கை எப்படியிருக்கிறது? நாமும் இயேசுவைப் போல ஜெபிக்க கற்றுக்கொள்ளுவோம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் இருக்கும் போது நமக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார். அவருடைய ஜெப வாழ்க்கை நம்மையும் மாற்றும் என்பதில் சந்தேகமில்லை. நாமும் கூட ஜெபிக்க கற்றுத் தாரும் என்று ஆண்டவரிடத்தில் கேட்கும்போது ஆண்டவர் நமக்கு ஜெப ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் கொடுப்பார்.

### 3. <u>இயேசு கிறிஸ்துவை நாம் நோக்கிப் பார்க்கும் போது அவரிடத்தில் உள்ள ஆத்துமபாரத்தை நாம் காண்கிறோம்.</u>

மத்தேயு 9:36 சொல்லுகிறது. இயேசு திரளான ஜனங்களை பார்த்த போது அவருடைய மனம் சந்தோஷமடையவில்லை. இவ்வளவு ஜனங்கள் வந்திருக்கிறார்கள் என்று ஆண்டவர் சந்தோஷப்படவில்லை. அவர் திரளான ஜனங்களை பார்த்த போது மனதுருகினார். ஜனங்கள் எல்லோரும் மேய்ப்பனற்றவர்களாய் இருந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியினால் அவர்கள் மீது மனதுருகினார் என்று வேதம் சொல்லுகிறது. அதைப் போல மத்தேயு 14 :14–ல் வாசிக்கிறோம். அவர் திரளான ஜனங்களை கண்ட போது வியாதியஸ்தர்களை கண்டு மனதுருகி அநேகரை சொஸ்தமாக்கினார். நாயீன் ஊருக்கு சென்ற

போது விதவையின் மகன் இறந்துவிட்டான் என்று கண்ட போது அவர் மனதுருகி அந்த பாடையை தொட்டார் வா–பன் எழுந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். லாசரு இறந்த போது மரியாளும் மார்த்தாளும் கலங்கி அழுத போது இயேசு கண்ணீர் விட்டார் என்று நாம் பார்க்கிறோம். எனக்கன்பானவர்களே நம்முடைய வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து நம்முடைய இருதயத்தில் இருப்பாரென்றால் நாம் இயேசு கிறிஸ்துவை பரிபூரணமாக ஏற்றுக்கொண்டோமென்றால் நமக்குள் இந்த ஆத்துமபாரமும், மனதுருக்கமும் தங்கியிருக்கும். மத்தேயு 15 :32–ல் இவ்வாறு வாசிக்கிறோம். இவர்கள் பசியாயிருக்கிறார்கள் இவர்கள் பட்டினியாய் போவதற்கு எனக்கு மனமில்லை என்று இயேசு கிறிஸ்து கூறினார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பாதையிலே அதிகமான ஆத்துமபாரம், அவருக்குள் இருந்த மனதுருக்கமும் ஊழியத்திலே அதிகமாய் இருந்தது என்று காண்கிறோம். யோவான் 4–ம் அதிகாரம் வாசித்துப் பார்க்கும் போது அங்கு ஒரு விபச்சார சமாரிய ஸ்தீரி வருகிறதைப் பார்க்கிறோம். தனக்கு பசியாயிருந்தது, தாகமாயிருந்தது ஆகிலும் கூட அந்த ஒரு ஆத்துமாவை ஆண்டவர் வழிநடத்துகிறார். அவள் இரட்சிக்கப்பட்டு முழு கிராமத்தையும் இரட்சிப்பிற்குள் வழிநடத்துகிறாள். நாம் ஆண்டவருக்கு ஏதாவது போஜனம் கொடுக்க வேண்டுமென்றால் யோவான் 4 : 34 சொல்லுகிறது இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது பிதாவினுடைய சித்தம். அவருடைய சித்தத்தை நாம் செய்து முடிக்கிறவர்களாய் மாற வேண்டும். இயேசு மரிக்கும் போது கூட தனது வலதுபக்கத்தில் இருந்த கள்ளனை பார்த்து சொல்லுகிறார். இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசியி–ருப்பாய் அவர் உலகத்திலே ஊழியம் செய்த நாட்களில் அவருடைய மனதிலே ஆத்துமபாரமும் ஆத்துமாக்களுக்காக மனதுருக்கமும் நிரம்பியிருந்தது என்று பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து நமக்குள் ஜீவிக்கும் போது நம்மைச் சுற்றியிருக்கிற ஜனங்கள், நாம் சந்திக்கிற ஜனங்கள் எல்லாரையும் பார்க்கும் போது நமக்குள் ஆத்துமபாரம் இறங்கி வரவேண்டும். நமக்குள் இயேசு இருப்பாரென்றால் இந்த ஜனங்களை எப்படி இயேசு பார்ப்பாரென்று நாம் சற்று நினைத்து பார்ப்போம். இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த ஆத்துமபாரம் அவரை அநேக ஜனங்களை மனதுருக்கத்தோடு பிதாவாகிய தேவனண்டையில் வழிநடத்த ஏதுவாயிருந்தது என்று பார்க்கிறோம்.

## 4. இயேசு கிறிஸ்துவின் மே–ருந்த அபிஷேகம்

அப்போஸ்தலர் 10: 38 வேதம் சொல்லுகிறது இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களிலே பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகத்தினால் நிரப்பியிருந்தார். அவர் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். பிசாசின் பிடியில் அகப்பட்டவர்களை விடுதலை செய்தார். நோயினால் சிக்குண்டவர்களை அவர் சுகப்படுத்தினார் என்று நாம் பார்க்கிறோம். அவருடைய ஊழியத்தின் வெற்றிக்கு ஒரே ஒரு காரியம் என்னவென்றால் பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகம் செய்தார். லூக்கா 4 : 18–ம் வசனத்தில் கர்த்தருடைய ஆவியானவர் என்மே–ருக்கிறார் அவர் தரித்திரருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், கட்டுண்டவர்களை விடுதலையாக்கவும் அவர் என்மேல் இருக்கிறார் என்று இயேசு கிறிஸ்து சொன்னார். பரிசுத்த ஆவியானவர் எதற்காக கொடுக்கப்பட்டார்? தரித்திரருக்கு சுவிஷேசத்தை அறிவிக்க, கட்டுண்டவர்களை விடுதலையாக்க, நோயில் அகப்பட்டவர்களை சுகப்படுத்த ஆண்டவர் அபிஷேகத்தை கொடுத்திருக்கிறார். பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகித்தபடியினாலே அவர் இந்த உலகத்தில் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். யோவான் 14 : 12–ல் வாசிக்கிறோம். கர்த்தரை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது ஆண்டவர் அற்புத அடையாளங்களை செய்யும்படியாக நம்மை வைத்திருக்கிறார். இயேசுவின் மே–ருந்த அபிஷேகம் எனக்குத் தேவை என்று நாம் வாஞ்சையோடு கேட்டு அதைப் பெற்றுக்கொள்ளும் போது நாம் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், வல்லமையாக ஊழியம் செய்ய முடியும். பயங்கரமான உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தகாரங்களும், அநேக அறைகூவல் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த உலகத்திலே அற்புத அடையாளங்களை காணாவிட்டால் இயேசு கிறிஸ்துவை நோக்கி மக்கள் மனந்திரும்பமாட்டார்கள். இன்றைக்கு பீல் மக்கள் மத்தியில் திரளான ஆத்துமாக்களை கர்த்தர் தந்து வருகிறார் என்றால் சுதேச ஊழியர்கள் மட்டுமல்ல மூப்பர்களும், விசுவாசிகளும் இந்த அபிஷேகத்தை பெற்றுக்கொண்டவர்களாய் அவர்கள் ஆங்காங்கே சுவிசேஷத்தை அறிவித்து சாட்சிகளாய் விளங்குகிறார்கள்.

கர்த்தர் இன்றைக்கும் அற்புத அடையாளங்களை செய்து ஜீவிக்கிறார் என்பதை நிருபித்து வருகிறார். விசுவாசிகளின் அபிஷேகத்தினால் அற்புதங்கள் மூலமாக

அநேக ஜனங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்தப்படுகிறார்கள். இதை வாசிக்கிற எனக்கன்பான சகோதரனே, சகோதரியே இயேசு கிறிஸ்துவின் மே–ருந்த அபிஷேகம் நமக்கும் தேவை. அந்த அபிஷேகத்தை நாம் வாஞ்சிக்கும் போது அந்த அபிஷேகத்தின் வல்லமையை நமக்கு ஊற்றுவார். யோவான் 7:38 சொல்லுகிறது அந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளும் போது அப்போஸ்தலர் 1:8–ன் படி நாம் பெலனடைந்து அவருக்கு சாட்சிகளாய் விளங்குகிறோம். நாம் இயேசுவை நோக்கிப்பார்த்து பரிசுத்தமாக வாழ ஒப்புக்கொடுப்போம். பிதாவோடு ஐக்கியம் கொள்ளத்தக்கதாய் நம்முடைய ஜெப வாழ்க்கையை ஒப்புக்கொடுப்போம். இயேசு கிறிஸ்துவைப் போல ஆத்துமபாரம், மனதுருக்கம் உடையவர்களாய் வாழ்வோம். அவர் மேல் உள்ள அபிஷேகத்தை நாமும் பெற்று நாளுக்கு நாள் சாட்சியாக மற்றவர்களுக்கு முன்பாக வாழ்ந்து காட்டுவோம். கர்த்தர் தாமே இந்த வார்த்தையையும் இந்த வசனங்களையும் ஆசீர்வதிப்பாராக. நாமும் இயேசுவைப் போல மாறுவோம். இயேசுவைப் போல வாழ்ந்து இயேசுவுக்காய் சாட்சியாய் திகழுவோம்.

---

## பணித்தளத்திற்கு அவசர தேவை

பீல் ஆதிவாசி மக்களுக்கு கல்வியறிவு மிகவும் குறைவு பொதுவாக பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பமாட்டார்கள். பள்ளிக்கூடங்களும் சரியாக இயங்குவதில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாச குடும்பங்கள் ஆயிரமாயிரம் உண்டு. இன்று அவர்கள் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள். 1820–ம் ஆண்டு திருநெல்வே– பகுதியில் போதகர் ரேனியஸ் அவர்கள் ஊழியம் செய்து 371 சபைகளையும், 107 பள்ளிகளையும் கட்டித்தந்தார்கள் என டோனாவூர் CSI ஆலயத்திலுள்ள கல்வெட்டில் வாசித்தேன். அவர்கள் மட்டுமல்ல 200 ஆண்டுகளாக நமக்கு தேவன் பல மிஷனெரிகளை அனுப்பி கல்வியறிவை நமக்கு கிடைக்க கிருபை செய்தார்.

இன்று நாம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு வரும் ஆயிரமாயிரம் பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கு கல்வியறிவு பணியை செய்ய வேண்டியது நமது பொறுப்பாகும்.

பீல் ஆதிவாசி மாணவர்கள் கல்வி அறிவு தரும் இந்த திட்டத்திற்கு இம்மாதம் சில அவசரமான முக்கிய தேவைகள் உண்டு.

1. நமது சுதேச ஊழியர்களின் 950 பிள்ளைகளில் சுமார் 410 பிள்ளைகள் பள்ளிகளில் படித்து வருகிறார்கள். குறிப்பாக 50 பிள்ளைகள் அருகில் உள்ள நல்ல பள்ளிகளில் படித்து வருகிறார்கள். அவர்களுக்கு Fees கட்டுவதற்கு அவர்களுக்கு Dress மற்றும் நோட்டுப் புத்தகம் வாங்குவதற்கு அதிகமாக பணம் தேவைப்படுகிறது. மீதி பிள்ளைகள் அருகில் உள்ள கிராமத்திலும், சிலர் விடுதிகளிலும் படிக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும்.

2. நம் ஷாலோம் மாணவர் விடுதியில் இராஜஸ்தானில் டெபரியில் 220 பிள்ளைகளும், கோய்க்கா கிராம அனாதை பிள்ளைகள் விடுதியில் 25 பிள்ளைகளும், மத்தியபிரதேசம் அந்தர்வே–யா விடுதியில் 25 பிள்ளைகளும், குஜராத் ஐ.பி. மிஷனில் 90 பிள்ளைகளும், குஜராத் ஜெசவாடா விடுதியில் 30 பிள்ளைகளும் படித்து வருகிறார்கள். இந்த 400 விடுதி பிள்ளைகளுக்கு ஜூன் மாதத்தில் சீருடை மற்றும் புத்தகங்கள், நோட்டு இதர பொருட்கள் வாங்க வேண்டும்

மேற்கண்ட இரண்டு காரியங்களுக்காக சராசரி ரூ.500 வீதம் 800 பிள்ளைகளுக்கு **ரூ.4 இலட்சம்** நிதியுதவி நமக்கு இந்த மாதம் தேவைப்படுகிறது. இதை வாசிக்கும் நீங்கள் உங்கள் தொழில் அல்லது ஊழியம் அல்லது சபை அல்லது குடும்பத்தின் சார்பில் ரூ.500 வீதம் எத்தனை பிள்ளைகளை தாங்க முடியுமோ அத்தனை பிள்ளைகளை ஆதரிக்கும்படி பட்சமாய் கேட்கிறேன். நிதியுதவி அனுப்பும் போது ஆதிவாசி பிள்ளைகள் கல்வி நிதிக்கென்று குறிப்பிட்டு அனுப்புங்கள்.

# பணித்தளத்தில் மறக்க முடியாத நிகழ்வுகள்

## பாம்பின் சதியிலிருந்து.....

குஜராத்தில் ஜாலோத் தாலுகாவில் உள்ள ஹடுமத் கூட்டா கிராமத்தில் இருந்து ஊழியம் செய்து வரும் நமது சுதேச ஊழியர் **சந்துபாய் டாமோர்** காலையில் ஜெபித்து விட்டு ஞாயிறு ஆராதனைக்கு விரைவாய் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரம் வீட்டின் மேலேயிருந்து ஒரு சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. சத்தம் அதிகரிக்கவே அது என்ன சத்தம் என்று மேலே நோக்கிப் பார்த்தால் இந்த ஊழியரின் தலைக்கு மேலாக **கருநாக பாம்பு** நின்று நாக்கை நீட்டி சத்தம் போட்டு கொண்டேயிருந்தது. உடனே ஊழியர் சந்துபாய் "இயேசுவின் நாமத்தில் உனக்கு கட்டளை கொடுக்கிறேன். நீ இந்த இடத்திலேயே நில் எங்கும் போகாதே" என்று கூறிவிட்டு விரைவாக சென்று ஒரு ஈட்டியை எடுத்துக் கொண்டு வந்து மறுபடியும் "இங்கேயே நில்" என்று கூறிவிட்டு ஈட்டியால் ஓங்கி குத்தும் போது அது வாயை திறந்ததால் அதன் வாய்க்குள்ளாகவே ஈட்டியைக் குத்தி கொன்று போட்டார். பரிசுத்த ஆவியானவர் அவருக்குள்ளாக இருந்தபடியால் அவருக்குள்ளே எந்தவித பயமுமின்றி ஒரு அசாதாரணமான பெலனும் தைரியமும் அந்த நேரத்தில் கிடைத்தது.

**"சர்ப்பங்களையும் எடுப்பீர்கள் என்ற வார்த்தையின்படியே நடந்தது."**

## ஒரு சகோதரியின் சாட்சி

மத்தியபிரதேசம் ஜோபட் தாலுகாவைச் சேர்ந்த கபாய் என்ற சகோதரி உடல் முழுவதும் ஊறல் நோயினால் அவதிப்பட்டு எத்தனையோ மந்திரவாதிகள் மற்றும் மருத்துவங்கள் பார்த்தும் பலனில்லாமல் வேதனையோடு இருந்தாள். என்னை சுகப்படுத்த ஒரு தேவன் உண்டோ இந்த உலகில் என்று அடிக்கடி வேதனைப் படுவாள். திடீரென ஒருநாள் இரவு வெள்ளையங்கி தரித்தவராய் இயேசு ஸ்வாமி

இந்த சகோதரிக்கு தரிசனமானார். நான்தான் இயேசு, இந்த உலகத்தைப் படைத்தவர். உன்னை உருவாக்கினவர், என்னை விசுவாசி என்று கூறினார். மட்டுமல்லாமல் உனக்கு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். ஆண் குழந்தை வேண்டுமென்று நினைக்கிறாய் அல்லவா? நான் உனக்கு ஒரு ஆண் குழந்தையை தருகிறேன். அவனுக்கு இயேசு என்று பெயரிடு என்று கூறி மறைந்தார். என்ன அற்புதம்! அந்த சகோதரி காலையில் எழும்பும் போது ஊறல் வியாதியி–ருந்து விடுதலை பெற்றிருந்தாள். தன் கணவனிடம் அதைக் கூறும்போது அவன் உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. இப்படி பெயர் உள்ள கடவுள் இதுவரை கேள்வி பட்டதேயில்லை என்று கூறி குடித்துவிட்டு அவளை அடித்து துன்புறுத்த ஆரம்பித்தான். ஆனாலும் அவள் இயேசுவை விசுவாசித்து வாழ்ந்தாள். கர்த்தர் சொன்னபடியே அவளுக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். இயேசு என்று பெயரிட்டாள். இப்படியே மூன்று வருடங்கள் கழிந்தது, அதன்பின்பு அவள் கிராமத்தில் ஒரு சகோதரி வந்து இயேசுவைப் பற்றி கூறி பாடல் பாடினார்கள். அதை அறிந்து அந்த கூட்டத்திற்கு சென்று இன்னும் அதிகமாய் இயேசுவை அறிந்தாள். இவளுடைய கிராமத்தில் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். இவருடைய கணவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டார். திடீரென்று கிறிஸ்தவர்களுக்கு எதிர்ப்பு வந்தபோது வெளியூரி–ருந்து வந்த சகோதரியை வரவிடாமல் தடுத்து அவர்களை பயமுறுத்துகையில் அந்த சகோதரி மூலமாக பரிசுத்த ஆவியானவர் இந்த கிராமத்தில் ஊழியம் செய்ய வேண்டும் என்று கூறினார். நீ ஜெபிக்கும் போது வியாதியஸ்தர்கள் சுகமடைவார்கள். என்று தீர்க்கதரிசனம் கூறினார்கள். அதன்படியே இன்று அந்த சகோதரி ஷாலோம் ஊழியத்தில் வேதாகம பயிற்சி எடுத்து இன்று வல்லமையாய் அந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறாள்.

**“கர்த்தரே தரிசனமானார்”**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **சஞ்சய் B. கட்டாரா** |
| தகப்பனார் பெயர் | : | பாதா கட்டாரா |
| தாயார் பெயர் | : | ரெபிக்கா கட்டாரா |
| பிறந்த நாள் | : | 22–02–2002 |
| படிக்கும் வகுப்பு | : | I |
| சொந்த ஊரின் பெயர் | : | சுடாத்தா |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| தங்கி படிக்கும் விடுதி | : | Bijalpur |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

சஞ்சய் கட்டாராவின் தகப்பனார் இயேசுவை அறிவதற்கு முன்பாக பாவத்திலும் அந்தகாரத்திலும் வாழ்ந்து கொண்டிருந்தார். அந்த சூழ்நிலையில் இவன் தாய் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் செய்த போதும் சுகம் கிடைக்கவில்லை. ஆகையால் கவலையிலும் வேதனையிலும் இருந்த வேளையில் இவருடைய குடும்பத்தார் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு ஒரு சபைக்கு கொண்டு சென்றார்கள். அங்கே ஊழியர் இவருடைய தாய்க்காக ஜெபித்தவுடன் தேவன் தொட்டு அற்புதமாக சுகம் கொடுத்தார். இதைக்கண்ட குடும்பத்தார் இயேசுவே உண்மையான தெய்வம் என்று விசுவாசித்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். பின்பு இவருடைய தகப்பனார் பாதா கட்டாராவிற்கு தனது ஜனங்களைக் குறித்த பாரம் ஏற்படவே தன்னை ஊழியத்திற்கு என்று அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைத்து எதிர்ப்புகள், விரோதங்கள் மத்தியிலும் இராஜஸ்தானில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனின் திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

சஞ்சய் கட்டாரா நன்றாக படிப்பான். நன்றாக விளையாடுவான். பாடல் பாடுவான், நன்றாக ஜெபிப்பான்.

**ஜெபியுங்கள்:-**

நல்ல முறையில் படிக்க தேவன் விஷேசித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும் குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** Mrs. Perosia, Chennai.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 280 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

✷ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையை கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

✷ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

✷ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.


✷ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையை செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, | | கிளை : தூத்துக்குடி |

✷ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

✷ வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.


# உண்டியலைப் பற்றி



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** (Box No.) எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். உங்களுக்கு அதை திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

# சந்தாவைப் பற்றி



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–      ஆயுள் சந்தா : ரூ.600/–**

## EeLÞdÏ ERY GeLÞdÏ ERÜeLs

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றது. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றி கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண்(Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No -யை) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

## ஜெபக் குறிப்புகள்



✞ ஒரு ஜாதி மக்களை தேவன் தரவும் ஒரு கோடி பீல் மக்களும் இரட்சிக்கப்படவும், 2020–க்குள் 7000 கிராமங்களில் 7000 ஊழியர்களும், சபைகளும் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்....

### *பீல் சுதேச ஊழியர்களின் குடும்பத்திற்காக....*

✞ ஊழியர்களின் பரிசுத்த வாழ்விற்காக ஜெபியுங்கள்....

✞ அபிஷேகத்தினால் நிரம்பி ஆவியானவரால் வழிநடத்தப்படும்படியாக ஜெபியுங்கள்....

✞ நல்ல மேய்ப்பர்களாய் ஆடுகளை மேய்த்து சபைகளை பராமரிக்கும்படியாக ஜெபியுங்கள்....

✞ ஊழியர்கள் உண்மையுள்ளவர்களாய் விளங்க ஜெபியுங்கள்....

✞ அவர்கள் பிள்ளைகளை தேவன் ஆசீர்வத்தித்து, பொருளாதார நன்மைகளினால் நிரப்பப்படும்படியாக ஜெபியுங்கள்....

✞ ஒவ்வொரு சபையிலும் குறைந்தது 7–12 மூப்பர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, ஒரு மனதாய் ஊழியருடன் இணைந்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபைகளை ஸ்திரப்படுத்தவும், இவ்வருடம் 5000 மூப்பர்கள் கூட்டம் நடத்தப்படவும் ஜெபியுங்கள்.

### *சபை நெட்ஒர்க்....*

✞ மூன்று மாநிலங்களிலும் சபைகள் ஸ்திரமாகவும், ஒழுங்காகவும் இருந்து திருமணம், இறப்பு பதிவுகள் மற்றும் கணக்கு வழக்குகளில் சிறப்பாக செயல்படவும் ஜெபியுங்கள்....

✞ 2010–க்குள் 300 சபைகளும் சுயதேவைகளை தாங்களே சந்திக்கும் மற்றும் கொடுக்கும் சபைகளாக மாறவும், 2008ம் ஆண்டின் மிஷன் ஞாயிறுக்காகவும், சுதேச ஊழியர்கள் மற்ற சுதேச ஊழியர்களைத் தாங்கவும், பிற ஊழியர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் ஜெபியுங்கள்....

✞ 2000 பீல் வா–பர்களுக்கு 10–15 முகாம்கள் நடத்தப்படவும், வா–பர்கள் எழும்பி பிரகாசிக்கவும் ஜெபியுங்கள்....

✞ ஞாயிறு பள்ளி நன்றாக நடைபெறவும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் எழும்பும்படியாகவும், பீல் சிறுவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, அபிஷேகம் பெற்று சாட்சிகளாய் விளங்கும்படியாக ஜெபியுங்கள்....

✞ இதுவரை கட்டி முடிக்கப்படாமல் தாமதமாகும் ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும், 2010–க்குள் 100 ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான அனுமதி கிடைக்கவும், உள்ளூர் சபைகளின் பங்கு கொடுக்கப்படவும் ஜெபியுங்கள்....

✞ 2010–க்குள் 300 புதிய சுதேச ஊழியர்கள் கிடைக்கப்பெறவும், 1 மாத பயிற்சி, அதைத் தொடர்ந்து தரப்படும் B.Th பயிற்சி இவைகளுக்காகவும் ஜெபியுங்கள்....

***பயிற்சி குழு....***

✞ பயிற்சி உபகரணங்கள், மூப்பர்கள் பயிற்சி, ஒ–, ஒளி உபகரணங்கள் தயாரித்துக் கொடுக்கவும் ஷாலோம் வேதாகமப்பள்ளி ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

✞ சுதேச ஊழியர்களுடைய மனைவிமார்கள், ஊழியர்கள், மூப்பர்களின் மனைவிமார்கள் பயிற்சி ஊழியங்கள், மருத்துவம், சுகாதாரம் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

✞ தாகோத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் தேவ பிள்ளைகள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள்.

✞ அலுவலக நிர்வாகம், வரவு செலவு கணக்குகள், தொடர்பு கடிதங்கள், வலைத் தொடர்பு, திட்டங்கள், திட்டமிடுதல், பயிற்சிக் மையம் பராமரித்தல் போன்றவற்றிற்காக ஜெபியுங்கள்.

***Compassion Project***

✞ ஹிரோலா, ஜெரி மற்றும் புதிய திட்டங்கள் குஜராத்தில் ஒன்றும், மத்தியபிரதேசத்தில் ஒன்றும் கிடைக்கப்பெறும்படியாக ஜெபியுங்கள்.

✞ தாகோத் வீடு வாங்குவதற்கு ரூ. 15 இலட்சம் சந்திக்கப்படவும், பயிற்சி மைய நிலம் ஊர்ஜிதப்படுத்தப்படவும் ஜெபியுங்கள்.

✞ மதமாற்றுத் தடை சட்டத்தின் மத்தியிலும் ஊழியம் வளரும்படியாக ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டங்களில் தேவன் எழுப்பிக்கொடுத்த ஜீவனுள்ள சாட்சிகள்**

பணித்தளம் : **சகோ. மங்கு புரியா (பாட்டன் பூரா)**

தேவ செய்தி : **சகோ. சுரேஷ் ஹத்திலா**

ஆராதனை : **சகோ.ரமேஷ்மேடா**

- ❖ காளிபேன் என்ற சகோதரி கை, கால்களில் வெட்டி, வெட்டி இழுக்கும் நோயுடன் எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஜெப நேரத்தில் தேவன் இந்த சகோதரியை தொட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார்.
- ❖ லீலாபேன் என்ற சகோதரி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டு சாட்சி கூறினாள்
- ❖ சவிதாபேன் என்ற சகோதரிக்கு இந்த எழுப்புதல் கூட்டத்தில் பங்குபெற்று இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக் கொண்டாள்.
- ❖ சன்னுபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியினால் சரீரத்தில் மிகவும் கஷ்டப்பட்ட நிலைமையில் இந்த எழுப்புதல் கூட்டத்திற்கு வந்திருந்தாள். ஜெபநேரத்தில் பிசாசின் பிடியி–ருந்து விடுதலை பெற்று சரீரத்திலும் தேவன் சுகத்தை கொடுத்தார்.
- ❖ ரூப்ளிபேன் என்ற சகோதரி மிகவும் பயங்கரமான தலைவ–யி–ருந்து விடுதலையை தேவன் கொடுத்தார்.
- ❖ பாத்துடிபேன் என்ற சகோதரிக்கு வயிற்றுவ–யி–ருந்து தேவன் சுகத்தை கொடுத்தார்.

---

பணித்தளம் : **சகோ. மங்கள் சிங் (மண்டேலா)**

தேவ செய்தி : **சகோ. வில்சன் பாய் சங்காடா**

- ❖ நார்சுபாய் என்ற சகோதரர் முது தண்டுவட வ–யினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் குஜராத்தில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஜெபத்தின் மூலமாக தேவன்அளித்த சுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

- ஒரு வா—ப சகோதரன் சாத்தானின் பிடியினால் எழுப்புதல் கூட்டத்திற்கு வரமுடியாதபடி கட்டப்பட்டிருந்தான். ஜெபத்துடன் சாத்தானின் தடையையும் மீறி அந்த சகோதரன் கூட்டத்தில் கலந்து கொண்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், ஆத்துமாவில் ஒரு ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டான்.
- ரமீலாபேன் என்ற சகோதரி பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டாள்.
- சமூ—பேன் என்ற சகோதரி இந்த எழுப்புதல் கூட்டத்தில் பங்குபெற்று இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக் கொண்டாள்.
- மன்னு டாமோர் என்ற சகோதரர் தேவனுடைய வார்த்தையை கேட்டு *தேவனால் தொடப்பட்டு தசமபாகம் கொடுக்க தீர்மானம் செய்தார்.*


---

பணித்தளம் : **சகோ. மத்தூர் ராட்டுவா சோட்டா உதய்பூர்**

தேவ செய்தி : **சகோ. கன்னுபாய் பாபோர்**

ஆராதனை : **சகோ. வில்சன் சங்காடா**

- மாதுரிபேன் என்ற சகோதரி வயிற்றில் கட்டியுடன் குஜராத்தில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்திற்கு வந்தார். ஜெப வேளையின் போது தேவன் கட்டி மறையும்படி ஒரு அற்புதத்தைச் செய்தார்.
- ஹர்சன்பாய் ராட்டுவா என்பவர் அதிக பிசாசின் பிடியில் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த கூட்டத்தில் பங்குபெற்றார். தேவன் அற்புத விடுதலையை கொடுத்தார்.
- ஹின்னாளிபேன் என்ற சகோதரியை தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பினார்.
- ஹிஜி—பேன் என்ற சகோதரி வசனத்தின் மூலம் ஆசீர்வாதத்தைப் பெற்றாள். மேலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டாள்.
- ஜாம்சிங் என்ற சகோதரர் நெஞ்சுவ—யுடன் கூட்டத்திற்கு வந்தார். ஜெபத்தில் சுகம் பெற்று விடுதலையுடன் வீடு திரும்பினார்.
- ஹல்காபேன் என்ற சகோதரி வசனத்தின் மூலம் போஷிக்கப்பட்டாள். பாரத்தோடு ஜெபித்தாள். ஜெபித்த போது இயேசு கிறிஸ்துவை தரிசனத்தில் பார்த்தாள்.



# பரி. லாரன்ஸ்

மிஷனெரி முன்னோடிகள்

**பரி. லாரன்ஸ்** பிறந்து வளர்ந்த இடங்களைப் பற்றிய விவரங்கள் அதிகமாக இல்லை. இவர் ஸ்பானியா தேசத்தைச் சேர்ந்தவரென்று சொல்லப்படுகிறது. இவருடைய தூய்மையான வாழ்க்கையும் அவருடைய நற்குணங்களும் அக்காலத்தில் ரோமாபுரியில் ஆர்ச் டீக்கனாக இருந்த பரி. சைட்டஸ் கவனத்தை இழுத்தது. அவர் பரி. லாரன்சை தம்மிடம் வரவழைத்து வேதாகம ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்தார். பின்னர் கி.பி. 257ஆம் வருடம் டீக்கன் பதவிக்கு அவரை உயர்த்தினார். சிறு வயதிலேயே இப்பதவிக்கு வந்த பரி. லாரன்ஸ் ஏழைகளுக்குப் பொருளுதவி செய்யும் பொறுப்பை பெற்றுக் கொண்டார். இப் பணியை சுயநலமற்ற எண்ணத்துடனும் மிகவும் பக்திவினயமாயும் அவர் செய்து விதவைகள் எளியவர்களால் மிகவும் போற்றப்பட்டார்.

கி.பி. 257ஆம் வருடம் சக்கரவர்த்தி வலேரியன் கிறிஸ்தவ சபையைத் துன்பப்படுத்தத் துவங்கி, கிறிஸ்தவ மார்க்கத்தை தான் அழித்துவிடுவதாக பறைசாற்றினான். அதற்கு ஆரம்பமாக கிறிஸ்துவின் மந்தை மேய்ப்பர்களான அத்தியர்சர்களையும், போதகர்களையும் கொலை செய்யும்படி உத்தரவிட்டான். பரி. சைட்டஸ் பிடிபட்டு தூக்குமேடைக்குக் கொண்டு போகப்பட்டார. பரி. லாரன்ஸ் அவர்பின் அழுதுகொண்டே சென்று “தகப்பனே, உம் மகனை விட்டு எங்கே செல்கின்றீர்? நான் எவ்விதத்தில் உமக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தயங்கினேன்?. என்னையும் உம்முடன் அழைத்துச் செல்லும்” என்று கதறினார். தான் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கும் நற்பேறு தனக்குக் கிடைக்காமல் போகுமோ என்று அங்கலாய்த்தார். பரி. சைட்டஸ் இதைக் கண்டு “எனக்குக் கிடைத்ததை விட பெரிய சோதனையும் சிறந்த வெற்றியும் உனக்கு வைக்கப்பட்டிருக்கிறது. வயோதிபனான எனக்கு அப்படிப்பட்ட நல்வாய்ப்பு கொடுத்து வைக்கவில்லை” என்றார். பின்னும் அவர் கிறிஸ்தவ சபையின் சொத்தும் பொருள்களும் எதிரியின் கையில் விழாதபடிக்கும் அவைகள் சரிவர விதவைகள் ஏழைகளுக்குப் பங்கீடு செய்வதைக் கவனிக்கவும் வேண்டுமென்று பரி. லாரன்சை

வேண்டிக் கொண்டார். தனக்கும் சீக்கிரத்தில் இரத்தச் சாட்சியாக மரிக்கும் பாக்கியம் கிடைக்குமென்று பரி. லாரன்ஸ் அளவில்லா ஆனந்தங் கொண்டார்.

ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவ சபைக்கு அக்காலத்தில் திரண்ட ஆஸ்திகள் இருந்தன. கிறிஸ்தவ போதகர்கள் பராமரிப்புக்கு வேண்டிய தொகையைத் தவிர, விதவைகள், பாதுகாப்பில்லாத கன்னியாஸ்திரீகள் இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பும் சபைக்கு இருந்தது. தூர தேசத்திலுள்ள ஏழை கிறிஸ்தவ மக்களுக்கும் பண உதவி செய்துவந்தனர். முன் சொல்—யபடி இப்பணியை பரி. லாரன்ஸ் நல்ல முறையில் உற்சாகத்துடன் செய்து வந்தார்.

ரோம அரசாட்சிக்கு உட்பட்ட பரிபெக்ட் கிறிஸ்தவ சபைக்கு அதிக சொத்து இருப்பதாகக் கேள்விப்பட்டு பரி. லாரன்சை தம்மிடம் வரவழைத்து "உம்மிடம் திரளான சொத்துக்கள் உண்டென்று கேள்விப்படுகிறேன். உம் மதக் கொள்கைபடி ராயனுக்கு செலுத்த வேண்டியதைச் செலுத்தவேவண்டும். உங்கள் கடவுள் இவ்வுலகத்தில் பணம் உங்களுக்காகக் கொடுக்கவில்லை. வார்த்தையால் உங்களைப் போஷித்தார். ஆகையால் உங்கள் பணத்தை எங்களுக்குக் கொடுத்து, வார்த்தைகளைக் கொண்டு நீங்கள் வாழ்க்கை நடத்துங்கள்" என்றார். அதற்கு பரி. லாரன்ஸ் "உண்மையாகவே எங்கள் சபைக்கு மிகுந்த சொத்து உள்ளது. அதற்குள்ள செல்வம் சக்கரவர்த்திக்கு கிடையாது அனாலும் எனக்கு சிறு அவகாசம் கொடுத்தால் அந்தச் சொத்தில் ஒரு சிறிய பாகத்தை உமக்குக் கொடுக்கிறேன்" என்றார். ரோம பிரிபெக்ட் பரி. லாரன்ஸ் "சொத்து" என்று சொல்லும்போது எதைக்குறித்து பேசினாரென்று புரிந்து கொள்ளவில்லை. ஆனால் தனக்கு அதிக சொத்து கிடைத்துவிட்டதாகவே எண்ணி மூன்று நாட்களில் அந்தச் சொத்தைத் தங்களிடம் காட்டும்படி கட்டளையிட்டார். அந்த மூன்று நாட்களில் சபை ஆதரித்து வந்த, தூய்மையான வாழ்க்கை நடத்திய கூன், குருடு, கால், கை, இழந்தவர்கள், குஷ்டரோகிகள், விதவைகள் இவர்களைத் தம் ஆலயத்தின் முன் வரிசை வரிசையாக நிறுத்தி, அவ்விடத்திற்கு ரோம பிரிபெக்டை அழைத்துச் சென்றார். ரோம பிரிபெக்ட் அத்தகைய காட்சியைக் கண்டதால் அவர் முகத்தில் கோபக் குறியைக் கண்ட பரி. லாரன்ஸ் எதைக் கண்டு கோபம் கொள்ளுகிறீர். உம் முன் நிற்கும் இவர்களே சபையின் கிரீடத்தில் முத்துக்களும் விலையேறப்பெற்ற கற்களுமாவார்கள்

உம்முடைய பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு கிறிஸ்தவச் சபையைச் சேர்ந்து இந்தக் கிறிஸ்தவ மக்களை போஷிக்க நீர் முன்வர வேண்டும்" என்று கூறினார்.

ரோம பிரிபெக்ட் அதிக கோபம் கொண்டு நீ உன் மதத்திற்காக மரிக்க ஆசைப்படுவாயென்று அறிவேன். ஆனால் நீ உடனே சாகமாட்டாய். நான் உன்னை வதைத்து அங்குல அங்குலமாக மரிக்க ஏற்பாடு செய்கிறேனென்று சொல்– ஒரு பெரிய இரும்பு அடுப்பைத் தயாரித்து அதன் கீழ் பாதி எரிந்த நிலக்கரியைப் போட்டு அவர் உடையை உரிந்து இரும்பு அடுப்பில் கட்டி வைத்தார். பின்னர் நெருப்பை அதிகமாக்கி அவரைச் சித்திரவதை செய்தான். பரி. லாரன்ஸ் கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வத்தினால் வேதனையைப் பொறுமையாக ஏற்றுக் கொண்டார். அவர் முகம் தேவ தூதன் முகம் போல் பிரகாசித்தது. வெகுநேரம் சென்ற பின்பு, மலர்ந்த முகத்துடன் என் உடலைத் திருப்பிப் போடுங்கள், ஒரு பக்கம் வேண்டிய அளவு வெந்துவிட்டது என்று கூறினார். பின்னர் ரோமாபுரி மக்களின் குணப்படுதலுக்காக ஊக்கமாய் ஜெபித்து ஜீவனை விட்டார். அவருடைய விசுவாசத்தையும் அவர் மரித்த விதத்தையும் கண்டு அநேகர் குணப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. அங்குள்ள பக்தர்கள் அவருடைய சடலத்தைத் தைபருக்கு போகும் சாலைக்கு அருகில் ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதி கி.பி 258ஆம் வருடம் நல்லடக்கம் செய்தனர். அவர் மரித்த வருடத்தி–ருந்து ரோமாபுரியில் விக்கிரகாராதனைக்காரர் எண்ணிக்கை குறைந்ததாகச் சொல்லப்படுகிறது. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இரத்த சாட்சியாக மரித்த கிறிஸ்தவப் பக்தர்களுள் பரி. லாரன்ஸ் மிகச் சிறந்தவர்.


## எங்களுடன் தொடர்பு கொள்ள

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Bro. V. Devadoss<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## நாட்டு நடப்புச் செய்திகள்....

நிலவை ஆராய இந்தியாவில் இருந்து விண்கலத்தை அனுப்பும் திட்டத்தின் முதல் கட்டமாக செப்டம்பர் 19ம் தேதி சந்திராயன்–1 என்ற விண்கலம் விண்ணுக்குச் செலுத்தப்படவிருக்கிறது. இது மொத்தம் 11 கட்டங்களாக 11 விண்கலங்களை விணணுக்குச் செலுத்தி நிலவை ஆராய்ச்சி செய்யும் திட்டமாகும். ஏற்கனவே 9முறை தோல்வியே இல்லாமல் வெற்றிகரமாக விண்ணுக்குச் சென்ற பி.எஸ்.எல்.வி. ராக்கட்டே இந்த சந்திராயன் விண்கலத்தையும் சுமந்து செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வவுனியா போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் 16.06.08 அன்று விடுதலை பு–கள் நடத்திய தற்கொலைப் படை வெடிகுண்டு தாக்குத–ல் 12 போலீசார் ப–யானார்கள். 22 பேர் படுகாயமடைந்துள்ளனர். ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத விடுதலைப் பு–கள் இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

தென்கொரியாவில் உள்ள சியோல் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர் லீ யுங் சுன் “குளோனிங்” முறையில் நான்கு நாய்க்குட்டிகளை உருவாக்கியுள்ளார். மோப்ப சத்தி மூலம் புற்று நோயை கண்டறியும் தன்மையுள்ள இந்த நாய்கள் பயிற்சிக்காக ஜப்பானுக்கு அனுப்பப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

போலந்து நாட்டைச் சேர்ந்த 38 வயதான பெண் பிரசவத்திற்காக லண்டன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் பிரசவ வ– தெரியாம–ருக்க மது அருந்தியிருந்தார். இவருக்கு பெண் குழந்தை பிறந்தது, பிறந்த பெண் குழந்தை மிகவும் போதையில் இருந்தது. இது இந்த குழந்தையின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும் என்பதால் குழந்தையின் தாய் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

–நன்றி தினத்தந்தி

## ஜெபவேண்டுகோள்



***கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,***

08.07.2008 அன்று எங்கள் திருமண நாள். கடந்த 23 ஆண்டுகளுக்கு முன் தேவன் எங்களை இணைத்தார். நாங்கள் திருமணமான 4வது நாள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது கைகளில் வில், அம்பு வைத்திருக்கிற மனிதர்களான பீல் ஆதிவாசி மக்களை தேவன் தரிசனத்தில் காட்டினார். அதன்பின் I.M.S. ஸ்தாபனத்தின் மூலமாக 5 ஆண்டுகள் தேவன் எங்களுக்கு பயிற்சியளித்து, ஷாலோம் மிஷனெரி ஊழியத்தினைத் தந்தார். தேவனுக்கே மகிமை! எங்கள் திருமண வாழ்வில் 23 ஆண்டுகள் தேவன் எங்களோடு இருந்து வருகிறார். ஜூலை 8ம் தேதி எங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்க அன்பாய் உங்களை கேட்கிறோம். இந்திய தேசத்தில் உள்ள பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் இன்னும் எங்களை பயன்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

இப்படிக்கு,

**வே. தேவதாஸ் – வஹிதா**

# சாத்பில்– கிராம ஆலயம்



மத்தியபிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் சாத்பில்– என்ற கிராமம் அமைந்துள்ளது. மலைகளும் காடுகளும் நிறைந்த பகுதி. சாராயத்தையே எப்பொழுதும் பருகிக் கொண்டு கொள்ளையடிப்பதே முக்கிய தொழிலாக செய்து பாவத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மந்திரவாதிகளையும், பூஜாரிகளையும் கடவுளாக நம்புவார்கள். கடவுள் அறிவும், உலக அறிவும், படிப்பு அறிவும் இல்லாமல் அந்தகாரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். டிகியா பாய் என்பவர் சாத்பில்– என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவருடைய மகன் ரத்தனாபாய் என்பவர் பிசாசின் பிடியினால் பிடிக்கப்பட்டு துன்பப்பட்டார். மட்டுமல்லாமல் இவருடைய குடும்பத்தில் ஒருவர் பின் ஒருவராக வியாதியில் சிக்கித் தவித்தார்கள். மருத்துவர்கள், மந்திரவாதிகளை நாடியும் எந்தவித மாற்றமும் இல்லை. இந்த நேரத்தில், ருன்கேடா கிராமத்தில் நடைபெறுகிற இயேசுவின் கூட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு ஆலயத்திற்குச் சென்றார்கள். சுதேச ஊழியர் மகன்பாய் என்பவர் ஜெபித்தபோது, தேவன் ரத்னாபாயை பிசாசின் பிடியி–ருந்து விடுவித்தார். தொடர்ந்து பாவ அறிக்கையிட்டு இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு இவருடைய வீட்டிலேயே கூட்டம் நடத்தப்பட்டது. இப்பொழுது சுமார் 30 குடும்பங்களிலுள்ளோர் விசுவாசிகளாகி இயேசுவை ஆராதித்து வருகிறார்கள். தற்போது டிகியாபாய் கொடுத்த நிலத்திலேயே தேவ நாமம் மகிமைப்டும்படியாக ஒரு ஆலயம்கட்டப்பட்டு, 29.03.2000 அன்று **சகோ. அகஸ்டின் ராஜசேகர்,** முதலூர் அவரகள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் **Intercession Prayer Group,** முதலூர் சார்பில் அளிக்கப்பட்ட நிதி உதவியில் கட்டப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008. TN/WPP-95/SR/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## ஷாலோம் ஊழியத்தின் 18ம் வருட ஸ்தோத்திர கூடுகை

இடம்

**A.S.K.R. திருமண மண்டபம்,**
தூத்துக்குடி.

| நாள் | நேரம் |
| --- | --- |
| 27.07.2008, ஞாயிறு | மாலை 6.00 மணிக்கு |



சிறப்பு செய்தி

## சகோ. V. தேவதாஸ்



பணித்தள செய்தி

## சகோதரி D. வஹிதா தேவதாஸ்

- சுதேச ஊழியர்களின் சாட்சி நேரம்...
- மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை...
- அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...

**குடும்பமாக கட்டாயம் வாருங்கள்! உங்கள் உறவினர் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து அழைத்து வாருங்கள்!!**

மேலும் தொடர்பு கொள்ள :–

**SHARING LOVE MISSION**

168/5, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.
**Ph : 0461 - 2375468, Mobile : 93456 - 75468**

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss